# ஆலோசனைக் கோவை

## *'தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப வீரர்கள்' போட்டித்தொடர்*

2020.02.19 ஆம் திகதிய மற்றும் 10/2020 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இணைப்பு 01

## (A) தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான மென்பொருள் போட்டித்தொடர் (NSSC) – இலங்கை கணினிச் சங்கம் நடாத்தும் இணையவழி போட்டித் தொடர்

### (A.1) போட்டிக் குழுக்கள்

இப்போட்டியானது இரண்டு வகையான வயதுப் பிரிவினரைக் கொண்டதாக கீழ்வரும் வகையில் நடைபெறும்.

1. முதலாவது குழு (Group 1) – தரம் 6 – 11 ((வயது 10 – 16 வரை)
2. இரண்டாவது குழு (Group 2) – தரம் 12 – 13 ( வயது 17 – 19 வரை)

### (A.2) போட்டியின் தன்மை

#### (A.2.1) ஆரம்ப சுற்றுப் போட்டிகள்

I. இது கணினி மொழி தொடர்பான அடிப்படை அறிவினை ஆராயும் இணையவழி (Online) மூலமாக நடைபெறும் ஒரு போட்டித் தொடராகும். இப்போட்டிகள் வலய/மாகாண மட்டத்தில் நடாத்தப்படும்.

II. வலய மட்டத்திலான இணையவழி (Online) போட்டிகளை நடாத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வது வலயத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப விடயத்திற்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்/ உதவிக் கல்விப்பணிப்பாளரின் பொறுப்பாகும். வலய மட்டத்திலான போட்டிகளில் உரிய ஆகக் குறைந்த புள்ளி மட்டத்தைத் பெறுகின்ற மாணவர்களுக்காக மாகாண மட்டப் போட்டிகள் நடாத்தப்படுவதோடு அதனை மாகாண தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப விடயத்திற்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்/ உதவிக் கல்விப்பணிப்பாளர் நடாத்துதல் வேண்டும்.

III. எவ்வாறெனினும் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டதாக காணப்படுமாயின் மாகாண கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் வலய மட்டத்திலான போட்டிகளை நடாத்தாமல் மாகாண மட்டத்தில் மாத்திரம் போட்டிகளை நடாத்த முடியும்.

#### (A.2.2) இறுதிப் போட்டி

I. மேற்படி A.2.1 இல் குறிப்பிடப்பட்ட உரிய ஆகக் குறைந்த புள்ளி மட்டத்தை பெறுகின்ற மாணவர்களுக்கான இறுதிப் போட்டி கல்வி அமைச்சின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கிளையின் வழிகாட்டலில் கொழும்பில் நடாத்தப்படும்.

II. இது இணையவழி (Online) மூலமாக நடாத்தப்படும் ஒரு போட்டியாகும். கணினி நிகழ்ச்சிகளை போட்டியாளர்கள் உருவாக்க வேண்டிய அதேவேளை மதிப்பீட்டு நடவடிக்கைகளும் இணையவழி (Online) மூலமாகவே மேற்கொள்ளப்படும். [போட்டியாளர்கள் இணையவழிப் (Online) போட்டியின் போது அவர்கள் வழங்கும் பதில்களுக்குரியதான மென் பாதுகாப்பு பிரதிகளை (Backups) தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.]

**(A.3) போட்டி விதிகள்**

1. போட்டியில் பங்குபெற விண்ணப்பிக்கும் போட்டியாளர்களுக்கு C/C++ அல்லது C# அல்லது Java பற்றிய அடிப்படைத் தெளிவு இருத்தல் அவசியமாகும்.

**தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான மென்பொருள் போட்டித்தொடர் (NSSC) பற்றிய மேலதிக விபரங்களுக்கு**

தலைவர்,
இலங்கை கணினிச் சங்கம் (CSSL),
275/75, பேராசிரியர் ஸ்ரான்லி விஜேசுந்தர
மாவத்தை,
கொழும்பு 07.
தொலைபேசி – 011-2592762/0114713290
தொலைநகல் – 011-2508009
மின்னஞ்சல் - - info@cssl.lk/ admin.exec@cssl.lk
Web site - www.cssl.lk

கல்விப் பணிப்பாளர்,
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கிளை,
கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்லை.
தொலைபேசி - 011-2785821
தொலைநகல் - 011-2785821
E-mail- ictchamps.2021@moe.gov.lk
Web site – www.moe.gov.lk

**(A.4) போட்டிக்காக பதிவு செய்தல் மற்றும் விண்ணப்பிக்கும் முறை**

1. • குறித்த வருடத்தில் மே மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய பிரிவுக்கான இணையவழி (Online) விண்ணப்ப படிவத்தினை கல்வி அமைச்சின் (www.moe.gov.lk) என்ற இணையதளத்திற்கு பிரவேசித்து பூரணப்படுத்துதல்.

   • இணையவழி (Online) மூலமாக விண்ணப்பிக்கும் போட்டியாளர்கள் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்திய எழுத்துமூலமான விண்ணப்பப் படிவத்தினை பூரணப்படுத்தி போட்டியில் பங்குபற்றும் போது சமர்ப்பித்தல் வேண்டும். இதற்கான விண்ணப்ப படிவத்தினையும் www.moe.gov.lk என்ற இணையதளத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

**அல்லது**

2. குறித்த வருடத்தின் மே மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் தங்களது பிரிவுக்குரியதான "REGISTRATION-NSSC" விண்ணப்ப படிவத்தினை பூரணப்படுத்தி அதிபரின் பரிந்துரையுடன் பதிவுத் தபாலில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "Registration – NSSC" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**போட்டியில் பதிவு செய்வதற்காக பயன்படுத்த வேண்டிய முகவரி**

கல்விப் பணிப்பாளர்,
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கிளை,
கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்லை.

**இணைப்பு 02**

**(B) இளம் கணினி விஞ்ஞானிகளின் போட்டித்தொடர் (YCS) – இலங்கை தகவல் தொழில்நுட்ப கைத்தொழில் நிறுவனம் (FITIS) மூலமாக நடைமுறைப்படுத்தப்படும் போட்டித்தொடர்**

**(B.1) போட்டிப் பிரிவு**

இப்போட்டியானது 3 பிரிவுகளின் கீழ் 3 வயதுப் பிரிவினருக்கு கீழ்வரும் வகையில் நடாத்தப்படும்.

| இலக்கம் | துறை | வயதுப் பிரிவு |
|---|---|---|
| 01 | • அடிப்படை வன்பொருள் இணையதளத்துடன் தொடர்புபடுத்தல் IOT (Internet of Things) பற்றிய ஆக்கம்<br>• செயற்கை நுண்ணறிவு தொடர்பான (Artificial Intelligence) ஆக்கம்<br>• ரொபோ தொழில்நுட்ப ( Robotics) ஆக்கம்<br>• கூட்டுத் தகவல் பகுப்பாய்வு (Big Data Analytics) தொடர்பான ஆக்கம் | 1 வது கனிஷ்ட பிரிவு<br>தரம் 6 – 8 (வயது 10 – 13) |
| | | 2 வது கனிஷ்ட பிரிவு<br>தரம் 9 – 11 (வயது 14 – 16) |
| | | சிரேஷ்ட பிரிவு<br>தரம் 12 – 13 (வயது 17 – 20) |
| 02 | • இணையதள (Websites) உருவாக்கம்<br>• நடமாடும் உள்ளீட்டு (Mobile App) உருவாக்கம்<br>• கணினி உள்ளீட்டு (Desktop App) உருவாக்கம்<br>• கணினி விளையாட்டு நிகழ்ச்சி (Computer Game Application) உருவாக்கம் | 1 வது கனிஷ்ட பிரிவு<br>தரம் 6 – 8 (வயது 10 – 13) |
| | | 2 வது கனிஷ்ட பிரிவு<br>தரம் 9 – 11 (வயது 14 – 16) |
| | | சிரேஷ்ட பிரிவு<br>தரம் 12 – 13 (வயது 17 – 20) |
| 03 | <u>திறந்தபோட்டிப் பிரிவு</u><br>(வழங்கப்படும் ஒரு முரண்பாட்டு நிலைமையினை தகவல் தொழில்நுட்ப அறிவினைக் கொண்டு உருவாக்கப்படும் தயாரிப்பினூடாக தீர்ப்பதற்கான ஆற்றல் தொடர்பில் அளவீடு செய்யும் ஒரு போட்டிப் பிரிவாகும்.) | குறித்த வருடத்தில் ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதிக்கு 16 வயதிற்கு குறையாத மற்றும் 21 வயதிற்கு மேற்படாத பாடசாலை மாணவர்கள். |

**(B.2) போட்டி விதிகள்**

I. போட்டிக்கான ஆக்கத்தினை தனியாகவோ அல்லது குழுவாகவோ சமர்ப்பிக்க முடியும். ஆக்கங்கள் கண்டிப்பாக சுயமான தயாரிப்பாக இருத்தல் வேண்டும். (ஒரு குழுவில் இருக்கக் கூடிய ஆகக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 03 ஆகும்.)

II. இதற்கான ஆக்கங்களை சிங்களம்/ தமிழ் அல்லது ஆங்கில மொழியில் சமர்ப்பிக்க முடியும்.

III. சமர்ப்பிக்கப்படும் ஆக்கங்கள் தலைப்பிற்குரியதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் வழங்கப்படும் தகவலானது பாடசாலைக் கட்டமைப்பிலோ அல்லது சர்வதேச மட்டத்திலோ பயன்படுத்தக் கூடிய சிறந்த கருத்தினைக் வழங்கக் கூடிய ஆக்கமாக இருத்தல் வேண்டும்.

IV. ஒரு போட்டியாளர்/ குழு ஒரு ஆக்கத்தினை மாத்திரமே சமர்ப்பிக்க வேண்டும்.

V. போட்டிக்கான பதிவு மற்றும் ஆக்கத்தினை சமர்ப்பிப்பிற்கு B.3 இல் காணப்படும் அறிவுறுத்தல்களுக்கமைவாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

VI. அந்தந்த போட்டிகளுக்குரியதான அறிவுறுத்தல்களின் படி பூரணப்படுத்திய இறுதி ஆக்கங்கள் இரண்டு மென் பிரதிகள் (இரண்டு இறுவெட்டுகள்) மூலமாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஆக்கத்துடன் அந்த ஆக்கம் ஓட்டம் செய்யப்படுவதற்காக பின்பற்ற வேண்டிய படிமுறைகளை ஆலோசனை குறிப்புகளாக சமர்ப்பித்தல் வேண்டும். ஆக்கத்தினை ஓட்டம் பயன்படுத்தும் சகல மென்பொருள் ஆலோசனைகளையும் குறிப்பில் குறிப்பிடுதல் வேண்டும் என்பதோடு விசேட மென்பொருள் ஆக்கமெனில் அதற்குரியதான சகல விபரங்களையும் (Service Pack/Drivers/Correct Software Versions, etc...) இறுவெட்டில் உள்ளடக்கி சமர்ப்பித்தல் வேண்டும். வன்பொருள் மற்றும் மென்பொருள் தொடர்பான ஆக்கங்கள் வீடியோ ஒளிப்பதிவு செய்யப்பட்டு சகல படிமுறைகளும் விபரங்களுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

VII. கருத்திட்ட மதிப்பீடு கீழ்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும்.

- சீரான தன்மை
- கருத்தியல் ரீதியான முன்வைப்பு
- செயற்பாடு மற்றும் பண்புகள்
- தரமான தன்மை
- சமர்ப்பனம் செய்தல் பற்றிய படைப்பாற்றல்

**இளம் கணினி விஞ்ஞானிகள் போட்டித்தொடர் பற்றிய மேலதிக விபரங்களுக்கு**


முகாமையாளர்,
இலங்கை தகவல் தொழில்நுட்ப
கைத்தொழில் நிறுவனம்,
4 ஆவது மாடி, இலக்கம் 344,
காலி வீதி,
கொழும்பு 03.
தொலைபேசி – 011-2577103
E-mail - ycs@fitis.lk
Web site - www.ycs.lk / www.fitis.lk

கல்விப் பணிப்பாளர்,
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கிளை,
கல்வி அமைச்சு,
‘இசுருபாய’,
பத்தரமுல்லை.
தொலைபேசி - 011-2785821
தொலைநகல் - 011-2785821
E-mail- ictchamps.2021@moe.gov.lk
Web site – www.moe.gov.lk

(B.3) பதிவு செய்தல் மற்றும் ஆக்கங்களை சமர்ப்பித்தல்

| போட்டிக்காக பதிவு செய்தல் | ஆக்கங்களை சமர்ப்பித்தல் |
|---|---|
| 1. • குறித்த வருடத்தில் மே மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக உங்களுக்குரிய குழுவிற்கான இணையவழி (Online) விண்ணப்பப் படிவத்தினை கல்வி அமைச்சின் (www.moe.gov.lk) என்ற இணையதள முகவரிக்கு அல்லது www.ycs.lk/ www.fitis.lk என்ற இணையதள முகவரிக்கு பிரவேசித்து பூரணப்படுத்துதல்.<br><br>• இணையவழி (Online) மூலமாக விண்ணப்பிக்கும் போட்டியாளர்கள் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்திய எழுத்து மூலமான விண்ணப்பப் படிவத்தினை பூரணப்படுத்தி போட்டியில் பங்குபற்றும் போது சமர்ப்பித்தல் வேண்டும். இதற்கான விண்ணப்பப் படிவத்தினையும் www.moe.gov.lk என்ற இணையதளத்தில் அல்லது www.ycs.lk/ www.fitis.lk என்ற இணையதளத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.<br><br>**அல்லது**<br><br>2. குறித்த வருடத்தின் மே மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடிய வகையில் உரிய பிரிவுக்குரியதான "REGISTRATION-YCS“ விண்ணப்பப் படிவத்தினை பூரணப்படுத்தி அதிபரின் பரிந்துரையுடன் பதிவுத் தபாலில் கல்வி அமைச்சின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவிற்கு அனுப்பி வைத்தல். | குறித்த வருடத்தில் மே மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடியவாறு உருவாக்கப்பட்ட ஆக்கங்கள், இறுவெட்டுகளில் மாத்திரம் உள்ளடக்கப்பட்ட இரண்டு மென் பிரதிகளுடன் “ENTRY SUBMISSION FORM– YCS” என்ற விண்ணப்ப படிவத்தினையும் பூரணப்படுத்தி அதிபரின் பரிந்துரையுடன் பதிவுத் தபாலில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல்.<br><br>**அல்லது**<br><br>குறித்த வருடத்தில் மே மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக ஆக்கங்களை சமர்ப்பிப்பதற்கு கல்வி அமைச்சின் (www.moe.gov.lk) என்ற இணையதளத்திற்கு அல்லது www.ycs.lk/ www.fitis.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசித்து இணையவழி (Online) மூலமாக தரவேற்றம் (Upload) செய்வதனை மேற்கொள்ள முடியும் என்பதுடன் அத்துடன் “ENTRY SUBMISSION FORM –YCS” என்ற விண்ணப்ப படிவத்தினையும் பூரணப்படுத்தி அதிபரின் பரிந்துரையுடன் தரவேற்றம் (Upload) செய்தல். |
| தபாலில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கின்ற போது “Registration- YCS” எனவும் ஆக்கங்களை சமர்ப்பிக்கின்ற போது “Entry Submission – YCS” எனவும் உரிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். | |

**போட்டியில் பதிவு செய்வதற்கு மற்றும் ஆக்கங்களை சமர்ப்பிப்பதற்கு பயன்படுத்த வேண்டிய முகவரி**

கல்விப் பணிப்பாளர்,
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவு,
கல்வி அமைச்சு,
‘இசுருபாய’,
பத்தரமுல்லை.

**இணைப்பு 03**

**(C) ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய மாணவர்களுக்கான "ஆக்கபூர்வமான ஆசிரியர்கள்" போட்டித் தொடர் – கல்வி அமைச்சின் மூலமாக நடைமுறைப்படுத்தப்படும் போட்டித் தொடர்**

இப்போட்டிக்கு அரசாங்க பாடசாலைகள் மற்றும் அரச அனுமதி பெற்ற பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் தேசிய கல்வியியற் கல்லூரிகளில், தேசிய போதனா டிப்ளோமா பாடநெறியைப் பின்பற்றும் ஆசிரிய மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

**(C.1) ஆசிரியர்களுக்கான "ஆக்கபூர்வமான ஆசிரியர்கள்" போட்டி - Teachers (T)**

| பிரிவு | ஆக்கங்களை சமர்ப்பிக்க கூடிய துறைகள் |
|---|---|
| திறந்த | • அடிப்படை வன்பொருள் இணையதளத்துடன் தொடர்புபடுத்தல் IOT (Internet of Things) பற்றிய ஆக்கம்<br>• செயற்கை நுண்ணறிவு தொடர்பான (Artificial Intelligence) ஆக்கம்<br>• ரொபோ தொழில்நுட்ப ( Robotics) ஆக்கம்<br>• இணையதள (Websites) உருவாக்கம்<br>• நடமாடும் உள்ளீட்டு (Mobile App) உருவாக்கம்<br>• கணினி உள்ளீட்டு (Desktop App) உருவாக்கம் |

**(C.2) கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களுக்கான "ஆக்கபூர்வமான ஆசிரியர்கள்" போட்டி - Teachers (T/T)**

| பிரிவு | ஆக்கங்களை சமர்ப்பிக்க கூடிய துறைகள் |
|---|---|
| திறந்த | • அடிப்படை வன்பொருள் இணையதளத்துடன் தொடர்புபடுத்தல் IOT (Internet of Things) பற்றிய ஆக்கம்<br>• செயற்கை நுண்ணறிவு தொடர்பான (Artificial Intelligence) ஆக்கம்<br>• ரொபோ தொழில்நுட்ப ( Robotics) ஆக்கம்<br>• இணையதள (Websites) உருவாக்கம்<br>• நடமாடும் உள்ளீட்டு (Mobile App) உருவாக்கம்<br>• கணினி உள்ளீட்டு (Desktop App) உருவாக்கம் |

**(C.3) போட்டி விதிகள்**

I. ஆக்கமானது தனிநபர் ஆக்கமாகவும் கண்டிப்பாக சுயமான ஆக்கமாகவும் இருத்தல் வேண்டும்.

II. ஆக்கத்தினை சிங்கள/ தமிழ் அல்லது ஆங்கில மொழியில் சமர்ப்பிக்க முடியும்.

III. சமர்ப்பிக்கப்படும் ஆக்கம் தலைப்பிற்குரியதாக அமைந்திருத்தல் வேண்டுமென்பதுடன் வழங்கப்படும் செய்தியானது பாடசாலைக் கட்டமைப்பிற்கு சிறந்த கருத்தினைக் வழங்கக் கூடிய ஆக்கமாக இருத்தல் வேண்டும்

IV. ஒரு போட்டியாளர் ஒரு ஆக்கத்தினை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும்.

V. போட்டிக்காக பதிவு செய்தல் மற்றும் ஆக்கங்களை சமர்ப்பிப்பதற்கு கீழ்வரும் ஆலோசனைகள் பின்பற்றப்படுதல் வேண்டும்.

VI. அந்தந்த போட்டிகளுக்குரியதான அறிவுறுத்தல்களின் படி உருவாக்கப்பட்ட ஆக்கத்தினை ஓட்டம் செய்வதற்காக பன்படுத்த வேண்டிய சகல மென்பொருள் ஆலோசனைகளையும் அறிவுறுத்தல் குறிப்பாக சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் விசேட மென்பொருள் ஆக்கமெனில் அதற்குரியதான சகல விபரங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும். இறுதி ஆக்கமானது இரண்டு மென் பிரதிகளாக (இரண்டு இறுவெட்டுகளில்) சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன். வன்பொருள் மற்றும் மென்பொருள் தொடர்பான ஆக்கங்கள் வீடியோ ஒளிப்பதிவு செய்து சகல படிமுறைகளும் விபரங்களுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**'ஆக்கபூர்வமான ஆசிரியர்கள்' போட்டி பற்றிய மேலதிக விபரங்களைப் பெறுவதற்கு**


கல்விப் பணிப்பாளர்,
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கிளை,
கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்லை.
தொலைபேசி - 011-2785821
தொலைநகல் - 011-2785821
E-mail- ictchamps.2021@moe.gov.lk
Web site – www.moe.gov.lk


**(C.4) பதிவு செய்தல் மற்றும் ஆக்கங்களை சமர்ப்பித்தல்**

| **போட்டிக்காக பதிவு செய்தல்** | **ஆக்கங்களை சமர்ப்பித்தல்** |
|---|---|
| 1. • குறித்த வருடத்தில் மே மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக உங்களுக்குரிய பிரிவுக்கான இணையவழி (Online) விண்ணப்பப் படிவத்தினை கல்வி அமைச்சின் இணையதளத்தின் (www.moe.gov.lk) இணைய முகவரிக்கு பிரவேசித்து பூரணப்படுத்துதல்.<br>• இணையவழி (Online) மூலமாக விண்ணப்பிக்கும் போட்டியாளர்கள் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்திய எழுத்து மூலமான விண்ணப்பப் படிவத்தினை பூரணப்படுத்தி போட்டியில் பங்குபற்றும் போது சமர்ப்பித்தல் வேண்டும். இதற்கான விண்ணப்பப் படிவத்தினையும் www.moe.gov.lk என்ற இணையதளத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.<br>அல்லது<br>2. குறித்த வருடத்தின் மே மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடிய வகையில் உங்களுக்குரிய பிரிவுக்குரியதான "REGISTRATION - TEACHERS (T)" விண்ணப்பப் படிவத்தினையோ அல்லது "REGISTRATION - TEACHERS (T/T) படிவத்தினையோ உரிய பரிந்துரையடன் பதிவுத் தபாலில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல். | குறித்த வருடத்தில் மே மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடியவாறு உருவாக்கப்பட்ட ஆக்கங்கள், இறுவெட்டுகளில் மாத்திரம் உள்ளடக்கப்பட்ட இரண்டு மென் பிரதிகளுடன் அதிபரின் அல்லது துணை வேந்தரின் பரிந்துரையுடன் "ENTRY SUBMISSION FORM– TEACHERS (T)" என்ற விண்ணப்ப படிவம் அல்லது "ENTRY SUBMISSION FORM–TEACHERS (T/T)" என்ற விண்ணப்ப படிவத்தினை பூரணப்படுத்தி அதிபரின் பரிந்துரையுடன் பதிவுத் தபாலில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல். |
| கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **TEACHERS (T)** அல்லது **TEACHERS (T/T)** எனவும் உங்களுக்குரிய போட்டிப் பிரிவையும் மாகாணத்தினையும் குறிப்பிடுதல் வேண்டும். | |

**போட்டியில் பதிவு செய்வதற்காக மற்றும் ஆக்கங்களை சமர்ப்பிப்பதற்கு பயன்படுத்த வேண்டிய முகவரி**

கல்விப் பணிப்பாளர்,
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவு,
கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்லை.

**(D) பொது அறிவுறுத்தல்கள்**

I. <u>பாடசாலை மட்டத்திலாக தெளிவூட்டல்</u> – இணைப்பு 01, 02 மற்றும் 03 இல் குறிப்பிடப்பட்டவாறு சகல போட்டிகளுக்குமான பதிவுகள் மற்றும் ஆக்கங்களை சமர்ப்பித்தல்; ஒவ்வொரு போட்டிக்கும் உரியதாக குறித்த திகதியில் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு குறித்த திகதிக்கு கிடைக்கப் பெறாத விண்ணப்பப் படிவங்கள் மற்றும் ஆக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

II. <u>போட்டி மதிப்பீடு</u> – மேற்படி போட்டிகள் அனைத்திற்குமான மதிப்பீட்டு நடவடிக்கைகள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினிக் கல்விப் பிரிவின் மூலமாக மேற்கொள்ளப்படும். (நடுவர் குழாத்தின் தீர்ப்பே இறுதியானதாகும்.) போட்டி மதிப்பீடுகள் இணையவழி (Online) மூலமாகவும் மாணவர்களை வரவழைத்தும் என இரண்டு வழிகளிலும் மேற்கொள்ளப்படவுள்ளன.

III. தேசிய மட்டத்தில் சான்றிதழ் வழங்கும் திகதி தொடர்பிலான விடயங்கள் அந்தந்த வருடத்தில் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

IV. இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள 2020.02.19 ஆம் திகதிய 10/2020 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 04 ஆவது பந்தி தொடர்பில் உங்களது கவனத்தினை செலுத்தவும்.

V. மேற்படி போட்டிக்கென ஆசிரியர்கள், ஆசிரிய மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை பங்குபற்ற வைப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சகல அதிபர்கள், வலய மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர்கள் தயவுடன் அறிவுறுத்தப்படுகின்றனர்.

(E) **கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக சகல போட்டிகளும் கீழ்வரும் சுகாதார பரிந்துரைகளை பின்பற்றியதாக நடாத்தப்படுதல் வேண்டும்.**

<u>தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான மென்பொருள் போட்டித்தொடர் ( NSSC)</u>

- வலய/ மாகாண/ தேசிய மட்டத்தில் போட்டிகளை நடாத்துவதற்கான அறிவுறுத்தல்கள் :

I. வலய/ மாகாண மட்டத்திலான இணையவழி (online) போட்டிகளை நடாத்துகையில் பரீட்சை நிலையங்களாக இயங்கும் கணினி விஞ்ஞான கூடங்களில் சுகாதார பரிந்துரைகளுக்கமைவாக சமூக இடைவெளி பேணப்பட்டு மண்டபத்தினுள் ஒரு தடவையில் இருக்கக் கூடிய ஆகக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கையை தீர்மானித்து பரீட்சைக்கென கட்டம் கட்டமாக மாணவர்களை அழைப்பதற்கு நடவடிக்கை மெற்கொள்ளப்பட வேண்டிய அதேவேளை பரீட்சைகளை நடாத்தும் திகதிகள் தொடர்பில் பிரதேசத்தின் சுகாதார மருத்துவ அலுவலர் அலுவலகத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

II. பரீட்சை மண்டபத்திற்குள் நுழைவதற்கு முன்னர் சவர்க்காரமிட்டு கைகளைக் கழுவுதல், முகக் கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியைப் பேணுதல் போன்ற கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையிலிருந்து பாதுகாப்பு பெறும் வகையில் நடவடிக்கைகள் பின்பற்றப்படுதல் என்பதுடன் பிரதேசத்தின் பொதுச் சுகாதார பரிசோதகரின் ஆலோசனையின் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

<u>இளம் கணினி விஞ்ஞானிகளுக்கான போட்டித்தொடர் (YCS)</u>

- குழு ஆக்கங்களை பாடசாலை மட்டத்தில் தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்கள் :

I. குழு ஆக்கங்கள் தயாரிப்பின் போது ஒவ்வொரு குழு உறுப்பினருக்கும் பணிகள் ஒதுக்கப்பட்டு கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக பின்பற்றப்பட வேண்டிய சமூக இடைவெளியைப் பேணுதல், முகக்கவசங்கள் அணிதல் போன்ற சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றுதல் தொடர்பில் தெளிவுபடுத்தல் வேண்டும்.

II. அனைத்து சந்தர்ப்பங்களிலும் சுகாதார வைத்திய அலுவலர் அலுவலகத்தில் முன்னறிவிப்புச் செய்து பொதுச் சகாதார பரிசோதகரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக செயற்படுதல் வேண்டும்.

- போட்டி மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் :

I. முதல் சுற்றின் போட்டி மதிப்பீடுகள் இணையவழி (Online) மூலமாக மேற்கொள்ளப்படுவதுடன் தேசிய மட்ட போட்டி மதிப்பீடுகளுக்கு மாணவர்களை அழைக்கின்ற போது சுகாதார ஆலோசனைகளுக்கமைவாக ஒரு நாளைக்கு அழைக்கக் கூடிய ஆகக் கூடிய மாணவர் எண்ணிக்கையினர் அழைக்கப்பட்டு கட்டம் கட்டமாக மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

II. போட்டிக்கான மதிப்பீடு இடம்பெறுகின்ற இடத்திற்கு வருகை தருவதற்கு முன்னதாக சவர்க்காரமிட்டு கைகளைக் கழுவுதல், முகக் கவசம் அணிதல் மற்றும் போட்டி மதிப்பீடு இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்தில் சமூக இடைவெளியைப் பேணுதல் ஆகியவற்றைக் கடைப்பிடித்தல் அவசியமாகும்.

'ஆக்கபூர்வமான ஆசிரியர்கள்' போட்டித் தொடர்

- போட்டி மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் :

I. இந்த போட்டிக்கான மதிப்பீடுகள் தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும். அத்துடன் போட்டிக்கென ஆசிரியர்களை அழைக்கின்ற போது சுகாதார அறிவுறுத்தல்களின் அடிப்படையில் ஒரு நாளைக்கு அழைக்கக் கூடிய ஆகக் கூடிய எண்ணிக்கையினர் மாத்திரம் அழைக்கப்பட்டு கட்டம் கட்டமாக மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

II. போட்டி மதிப்பீடு இடம்பெறுகின்ற இடத்திற்கு வருகை தருவதற்கு முன்னதாக சவர்க்காரமிட்டு கைகளைக் கழுவுதல், முகக் கவசம் அணிதல் மற்றும் போட்டி மதிப்பீடு இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்தில் சமூக இடைவெளியைப் பேணுதல் ஆகியவற்றைக் கடைப்பிடித்தல் அவசியமாகும்.